வீடு தேடி வரும்

# ஊராட்சி மேலாண்மை பட்டயக் கல்வித் திட்டம்



தானம் மக்கள் கல்வி நிலையம்
தானம் அறக்கட்டளை
மதுரை

## ஊராட்சி மேலாண்மை பட்டயக்கல்வி



உள்ளூர் அமைப்புகளின் சிறந்த செயல்பாடு இத்தேசத்தின் உயிர் நாடி. எங்கெல்லாம் ஆட்சி அதிகாரம் பரவலாக்கப்பட்டதோ, அங்கெல்லாம் நாடு மிக விரைவில் முன்னேறியுள்ளது. அரசு கொண்டுவந்துள்ள 73வது அரசியலமைப்பு சட்டத் திருத்தமானது உள்ளாட்சிகளுக்கு உயிரூட்டும் ஒரு முக்கிய முயற்சியாகக் கருதப்பட்டு இப்பொழுது இந்தியா முழுவதும் பஞ்சாயத்து அரசாங்கத்தில் 32 இலட்சத்திற்கும் மேலான மக்கள் பிரதிநிதிகள் பணியாற்றி வருகின்றனர்.மக்கள் அமைப்புகளும் பஞ்சாத்து அமைப்புகளும் இணைந்து செயல்படுவதன் மூலம் அடித்தள ஜனநாயகத்தை வலுப்படுத்தும் முயற்சியில்



தானம் அறக்கட்டளையானது 240 வட்டார நிறுவனங்களை ஒன்றிய அளவில், 2500க்கு மேற்பட்ட மக்கள் நிறுவனங்கள் பஞ்சாயத்து அளவிலும், 20,000க்கு மேற்பட்ட மக்கள் நிறுவனங்கள் கிராம மற்றும் நகரங்களில் உருவாகியுள்ளது. நல்ல தலைமைத்துவத்தை வளர்த்து அதனால் ஒவ்வொரு ஊராட்சியிலும் நல்ல வளர்ச்சியை நேர்மையாகவும், நாணமாகவும்,மக்கள் நிறுவனங்களில் உள்ள தலைமை பொறுப்பாளர்கள் சேவை செய்திட பயிற்சியும் கொடுத்து வருகின்றது. இது வரை 2000 நபர்கள் ஊராட்சி மேலாண்மை பட்டயக் கல்வி பயின்றுள்ளனர்.

இதனை மேலும் ஊக்கப்படுத்தும் பொருட்டு, வருகின்ற உள்ளாட்சி தேர்தலில், மக்கள் நிறுவனங்களில் செயலாற்றும் மக்கள் தலைவர்கள், பஞ்சாயத்து தலைவராகவோ மற்றும் வார்டு உறுப்பினராகவோ வர விருப்பப்படின், அவர்களுக்கு ஊராட்சி பற்றிய கல்வியை கொடுக்கும் பொருட்டு ஊராட்சி மேலாண்மை பட்டயக் கல்வி வழங்க தானம் மக்கள் கல்வி நிலையம் முன்வந்துள்ளது.

### பட்டயக் கல்வியின் நோக்கம்

1. ஊராட்சிகள் பற்றிய அடிப்படை அறிவை வழங்குதல்
2. ஊராட்சி சட்டங்கள் குறித்து அறிந்து கொள்ளச் செய்தல்.
3. ஊராட்சியின் அமைப்பு முறை மற்றும் பணிகள் குறித்து தெரிந்து கொள்ளச் செய்தல்.



4. ஊராட்சியின் மூலம் செயல் படுத்தப்படும் திட்டங்கள், செயலாக்கும் முறை குறித்து தெளிபடுத்துதல்.
5. ஊராட்சி தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் பொறுப்புகள், கடமைகள் குறித்து அறியச் செய்தல்.
6. ஊராட்சியை நிர்வகிக்கும் நிர்வாக முறைமைகளை எடுத்துரைத்தல்.
7. கிராம அளவில் பொறுப்பும் அக்கரையும் மனிதாபிமானமும் கொண்ட நிர்வாகத்தை வழி நடத்திச் செல்லும் நிர்வாகிகளை உருவாக்குதல்

## தகுதி:

1. எழுத, படிக்க தெரிந்திருத்தல் வேண்டும், வயது வரம்பு இல்லை
2. நடக்க விருக்கின்ற உள்ளாட்சி தேர்தலில் வார்டு உறுப்பினர்ராகவோ, பஞ்சாயத்து தலைவராகவோ செயல்பட விருப்பம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. தானம் குழுமத்தில் அடங்கியுள்ள பல்வேறு திட்டங்களில் உள்ள மக்கள் அமைப்புகளின் பல நிலைகளில் (குழு, பகுதி, வட்டாரம்) தலைவி மற்றும் தலைவர்கள்

## பயிற்று முறை

அஞ்சல் வழி கல்வி மற்றும் வகுப்பறை கல்வி

**பட்டயக்கல்வி காலம் :** 1 வருடம்

**சேர்க்கை :** பிப்ரவரி முதல் ஏப்ரல் 2011 வரை

**தொடர்பு வகுப்புகள் :** ஒரு வருடத்திற்கு 3 நாட்கள் மூன்று மாதத்திற்கு ஒருமுறை பயில்வோரின் எண்ணிக்கையைப் பொறுத்து மண்டல அலுவலகங்களில் நடைபெறும்.

**ஆசிரியர்கள் :** இத்துறையில் பல வருடங்கள் கள அனுபவம் உள்ளவர்கள், துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் சிறந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள்..

**இறுதி தேர்வு :** டிசம்பர் 2011

## பட்டயக் கல்விக் கட்டணம்

ரூ 1000 மட்டும் (பாடப்புத்தகம்,தொடர்பு வகுப்புகள், மற்றும் தேர்வு கட்டணம்)

## விண்ணப்பிக்கும் முறை

- வட்டாரம் மற்றம் மண்டல அலவலகங்களில் விண்ணப்பங்கள் பெறலாம்
- 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படம் கொடுத்தல் வேண்டும்
- விண்ணப்பித்த 2 வாரங்களில் அடையாள அட்டை மற்றும் பாடபுத்தகங்கள் கொடுக்கப்படும்

## தேர்வு மற்றும் சான்றிதல்

தொடர் வகுப்புகள் நடைபெறும் இடங்களில் இறுதி தேர்வு நடைபெறும். தேர்ச்சி பெற்றவர்களுக்கு "ஊராட்சி மேலாண்மை பட்டயக்கல்வி" சான்றிதழ் மற்றும் "பட்டயம்" வழங்கப்படும்

## தானம் அறக்கட்டளை

தானம் அறக்கட்டளையானது வறுமையை அகற்றும் பொருட்டு கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் அமைப்புகளை உருவாக்கி, எட்டறை இலட்சம் உறுப்பினர்களின் வாழ்வாதாரதத்தை மேம்படுத்தும் பொறுட்டு பல்வேறு திட்டங்களை உருவாக்கி, இந்தியாவில் 13 மாநிலங்களில் சிறப்பாக செயல்பட்டு கொண்டு வருகின்றது.

தானம் அறக்கட்டளையானது ஏழை பெண்களுக்கான சமூக வங்கி திட்டம், நீர் ஆதாரம், வாழ்வாதாரம், தகவல் தொழில்நுட்பம், மானாவாரி விவசாய மேம்பாட்டு திட்டம், கடல் வளப் பாதுகாப்பு, பருவநிலை மாறுபாட்டுக்கு ஒத்திசைதல், இளைஞர்கள் மேம்பாடு மற்றும் இடம் பெயர்தல் போன்ற திட்டங்களில் மூலம் வறுமை ஒழிக்கப் பாடுபட்டு வருகின்றது.

## தானம் மக்கள் கல்வி நிலையம்



தானம் மக்கள் கல்வி நிலையமானது மேற்கண்ட திட்டங்களில் உள்ள மக்கள் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பணியாளர்களுக்கு திறமைகளை வளர்த்து, மக்கள் நிறுவனங்களின் நிலைத்த, நீடித்த வளர்ச்சிக்கு பாடுபடுகின்றது. இக்கல்வி நிலையத்தில், வளர்ச்சி மேலாண்மை பற்றிய கல்வி, மற்றும் பயிற்சிகள், கருத்தரங்குகள், பட்டறிவு பயணங்கள் ஒருங்கிணைத்தல் ஆகிய பணிகளை செய்து வருகின்றது. தொலை தூர கல்வித் திட்டத்தையும், மக்கள் ஆசிரியர்களின் திறன் மேம்பாடு மற்றும் சான்றிதழ், பட்டய கல்வியையும் அளித்து மக்கள் தலைவர்கள் மற்றும் பணியாளர்களின் திறன் மேம்பாட்டிற்காக பணியாற்றி வருகின்றது.

**மேலும் விபரங்களுக்கு**

ஒருங்கிணைப்பாளர்
பஞ்சாயத்து மேலாண்மை பட்டயக் கல்வித் திட்டம்
தானம் மக்கள் கல்வி நிலையம்
புல்லூத்து அஞ்சல், மதுரை- 625 016.
தொலைபேசி : 0452 - 2475416, 2475305
மின்னஞ்சல் : dpa@dhan.org
இணையதளம் : www.dhan.org/centres/peopleacademy.